# குரு ஸ்துதி

குரூர் ப்ரம்மா குரூர் விஷ்ணு;
குரூர் தேவோ மஹேச் வரஹ;
குருஸ் ஸாஷாத் பரப்ரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம;

- உபநிஷத்

| | | |
|---|---|---|
| திடஞானி | தெரிசனமே | தீர்த்தமாடல் |
| திடஞானி | தெரிசனமே | தேவபூஜை |
| திடஞானி | தெரிசனமே | செபதபங்கள் |
| திடஞானி | தெரிசனமே | செயுமறங்கள் |
| திடஞானி | தெரிசனமே | சிவத்தைக் காணல் |
| திடஞானி | தெரிசனமே | சிவத்தின் சேவை |
| திடஞானி | தெரிசனமே | மேவுதற்குத் |
| திரிவிதமா | முகத்து | மரிதா மியார்க்கும் |

- ரிபுகீதை

தந்தை தாயாவனும் சார்கதி இங்காவானும்
எந்தனுயிர் தாமாகுவானும் சரணாகுவானும்
அருட் கோனாகுவானும் குரு.

# ஓம் சற்குருவே நம

## ஸ்ரீ சற்குருநாத மாமுனிவரின் வரலாற்று சுருக்கம்

(ஆத்மஞானி தேனி ஸ்வாமிகள் கூறியது)

சற்குருநாதன் சுவாமிகள் தமிழ்நாட்டை சேர்ந்த விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் வேப்பிலைப்பட்டி மற்றும் மணிப்பார்பட்டிக்கு இடையே நடுவப்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். சாமிகளுக்கு மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண்மகனும் இருந்தார். சாமிகளுக்கு பெற்றோர் இட்ட பெயர் சங்கரப்பன். இயற்பெயர் காளைச்சாமி. காளைமாட்டை போல் மூன்று உப்புமூட்டையின் சுமையை மெயின்ரோட்டிலிருந்து நடுவப்பட்டிக்கு சுமந்து செல்வாராம். இதனால் காளைச்சாமி என்று அழைக்கப்பட்டார். சுவாமிகள் 10 வயதிலிருந்தே சாதுக்களுடன் பழகுவது வழக்கம். மேலும் வழிபோக்கு சாதுக்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக நடுப்பட்டி ரோட்டில் மடம் ஒன்றை கட்டியது இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவர் 33-வது வயதில் மனைவியை சாட்சியாக வைத்து தன் சொந்த வீட்டில் சமாதி ஆனார். சாமியின் உடன் பிறந்தவர்கள் சாமியின் மனைவியிடம் தம்பியை காணவில்லை. சாமியின் வீட்டில் பூசு மண் இருப்பதால் சாமியை கொன்று புதைத்துவிட்டாயா எனக் கேட்டனர். அதனால் சாமியின் மனைவி மண்ணை களைத்து சாமியை வெளிப்படுத்தினார்கள். அதன்பிறகு சாமி புறப்பட்டு சுப்புலாபுரம் வந்துவிட்டார். அந்த சமயம் கிராமத்தை சேர்ந்த ஒருவர் பாம்பு கடித்து இறந்துவிட்டார். சாமிகள் இறந்த உடலைப் பார்த்து "பாம்பை கடிச்ச" என்று சொன்னாராம். சொன்னவுடன் இறந்த மனிதர் எழுந்து நடந்துவிட்டாராம். அப்போது

சுப்லாபுரத்தை சேர்ந்த பெரியவர்கள் இவர் ஒரு மகான் என்று புரிந்துகொண்டார்கள். அதன்பிறகு அந்த ஊர் பெரியவர்கள் சுவாமியை அணுகி விசாரிக்கும்போது சாமிகள் நான் இங்கு சமாதியாக வேண்டும் எனக் கேட்டாராம். ஊர் பெரியவர்க சுவாமிகள் சமாதி ஆவதற்கு சம்மதித்தார்கள்.

சாமிகள் சமாதிமுறையை எழுதி கொடுக்க அதன்படி ஊர் பெரியவர்கள் சாமியை சமாதி ஆக்கினார்கள். சாமிகளின் முதல் சமாதி சுப்புலாபுரம் மரிக்குண்டு கிராமம் ஆண்டிப்பட்டி தாலுக்கா தேனி மாவட்டத்தில் 1910-ம் வருடம் வைகாசி மாதம் சமாதியாய் எழுந்தது. ஆனி மாதம் அமாவாசை திதி திருவாதிரை நட்சத்திரம் வந்த நாள் சாமிகளின் குருபூஜையாக கொண்டாடப்படுகிறது.

சீடர்கள் :

வேலப்ப நாயக்கர், சங்கரப்ப நாயக்கர் என்ற பெத்தப்ப நாயக்கர், பெரியதனம் வேல் நாயுடு, சுந்தரலிங்கம் பிள்ளை ஆசிரியர் முக்குட்டுமலை, நானம நாயக்கர், ஐயல் நாயக்கர்

இவர்கள் சாமியின் சமாதி நிலைக்கு தேவையான ஏற்பாடுகளை செய்தனர். சாமி சமாதியில் இருக்கும்போது இவர்கள் சீடர்களாக இருந்தார்கள்.

சாமிகளின் முதல் சமாதி சொந்த வீட்டில் அது பூர்த்தி ஆகாமல் குழித்தோண்டி எடுத்தமையால், சுப்புலாபுரம் வந்து சமாதி பூர்த்தி ஆனது. அதன்பின் திருவானைக்காவில் வெள்ளனூர், திருவண்ணாமலையில் வெளிச் சமாதியாகவும் இருந்ததாகவும் 1985-ம் வருடம் தலபுராணம் கூறுகிறது. மேலும் பழனி, ஊட்டி, குன்னூர், நாமக்கல் என நமக்கு தெரியாத பல இடங்களில் சமாதி ஆகியுள்ளார்கள்.